**கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்**

**COS.No. 58 of 2024**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11ம் நாள் செவ்வாய்க்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | DW2– திரு.சுகுமாறன் | கிராமம்: | |
| த.பெ. | திரு.நடேசன் | வேலை: | |
| வயது | 76 | செல்போன் எண் | |

முதல் விசாரணை:

என் பெயர் சுகுமாறன், வயது 76, த/பெ.நடேசன். நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். ஆவணங்கள் இல்லை.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

நீங்கள் பிரதிவாதியின் மேலாளர் என்பதை காட்டுவதற்கு இவ்வழக்கில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதிக்காக நீங்கள் சாட்சிமளிப்பதற்கான அவருடைய அத்தாட்சி கடிதமோ அல்லது வேறு ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

நிரூபண வாக்குமூலத்தில் நீங்கள் எந்த தேதி முதல் எந்த தேதி வரை பிரதிவாதி நிறுவனத்தில் மேலாளராக பணியில் இருந்தீர்கள் என்பதை கூறவில்லை என்று சொன்னால் சரிதான், நான் சொல்லவில்லை, ஆனால் 1979 முதல் 1982 வரை வேலை பார்த்தேன்.

அவ்வாறு நீங்கள் 1979 முதல் 1982 ஆம் ஆண்டு வரை வேலை பார்த்ததாகவும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

நீங்கள் இந்த வழக்கு பற்றி எந்த விவரங்களும் தெரியாமல் பிரதிவாதியின் வழக்கை ஆதரித்து பொய்யாக இவ்வழக்கில் சாட்சியமளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் பிரதிவாதி நிறுவனத்தில் மேலாளராக பணியில் எப்போதும் இருக்கவில்லை, வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/-K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.